# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● அக்டோபர் 12, 2024 | Weekly E-paper ● October 12, 2024




# அரசும் மதச்சார்பின்மையும்!

சுப. வீரபாண்டியன்

## பேரவைச் செய்திகள்

## தொழிலாளர் உரிமை காப்போம்

தலையங்கம்

## கலைஞர் என்றொரு தலைவர்

நிகில் தேவ்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● அக்டோபர் 12, 2024    Weekly E-paper ● October 12, 2024


# அரசும் மதச்சார்பின்மையும்!

சுப. வீரபாண்டியன்

*விஜயதசமி நாளன்று, பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்கும் நடைமுறைக்கு அரசும் இணக்கமாக இருப்பது மதச்சார்பின்மைக்கு எதிரானது இல்லையா என்று ஒரு நண்பர் கேட்டார். மதச்சார்பின்மை என்பது இந்தியாவின் மற்றும் தமிழ்நாடு அரசின் கொள்கை என்றாலும், வெகுமக்கள் அரசு சில நேரங்களில் மக்களின் மத நம்பிக்கைகளோடு இணங்கிப் போக வேண்டி இருக்கிறது என்பது ஒரு கசப்பான உண்மை!*

*இதனை ஒரு முறை நேருவே குறிப்பிட்டார். இந்தியா போன்ற, மத நம்பிக்கை கூடுதலாக உள்ள ஒரு நாட்டில், மதச்சார்பின்மையை ஓர் அரசு கடைபிடிப்பது என்பது மிக மிகக் கடினமானது என்றார் அவர். அதனால் மதச்சார்பின்மையை அரசு கைவிட்டு விட வேண்டும் என்பது அதன் பொருள் ஆகாது!*



**“புத்தகங்களைப் படிப்பதை விட, வணங்குவது மக்களுக்கு எளிதாக இருக்கிறது. வணங்கினால் போதும், கல்வியும் அறிவும் வந்துவிடும் என்று பொய்யாக விதைக்கப்பட்டு இருக்கும் நம்பிக்கை மக்களின் மூளைகளில் பதிந்து கிடக்கிறது!”**

*அறிவியல் பார்வையை, அறிவியல் சிந்தனையை மக்களிடம் வளர்ப்பதற்கு, அரசும், சமூக அமைப்புகளும் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். அஃது அத்தனை எளிதானதன்று! எனினும் விடா முயற்சியை நாம் கைவிட்டு விடக்கூடாது !*

*இன்று நாடு முழுவதும், வீடுகளிலும், அலுவலகங்களிலும், தொழிலகங்களிலும் – ஏன் – அரசு நிறுவனங்களிலும் கூட பூஜைகள் நடப்பதை நாம் பார்க்கிறோம். , புத்தகங்களையும், கருவிகளையும், மிதிவண்டி, கார் போன்ற வாகனங்களையும் சுத்தம் செய்து அவற்றிற்குப் பூவும் பொட்டும் வைத்து, அவற்றை வணங்கும் ஒரு தன்மை அன்று போலவே இன்றும் பரவி இருக்கிறது!*

*எல்லா அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகளையும் பயன்படுத்திக் கொள்ளும் நாம். அவற்றைப் புறந்தள்ளிவிட்டு, மத நம்பிக்கைகளுக்குள் மூழ்கிக் கிடப்பதையே நடப்பில் பார்க்கிறோம்.*

*புத்தகங்களைப் படிப்பதை விட, வணங்குவது மக்களுக்கு எளிதாக இருக்கிறது. வணங்கினால் போதும், கல்வியும் அறிவும் வந்துவிடும் என்று பொய்யாக விதைக்கப்பட்டு இருக்கும் நம்பிக்கை மக்களின் மூளைகளில் பதிந்து கிடக்கிறது!*

*இதனை உடனடியாகப் போக்கிவிடவும் முடியாது. அதற்காக ஏற்றுக் கொள்ளவும் முடியாது. அரசுக்கும், சமூக அமைப்புகளுக்கும் "நிரம்ப இருக்கிறது வேலை " என்பதைத்தான் இச்சூழல் நமக்கு உணர்த்துகிறது!*

●

# கண்டனக் கூட்டம்




திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் இளைஞரணி ஒருங்கிணைப்பில், தேனாம்பேட்டை அன்பகத்தில் “கருத்துரிமைக்கு எதிரான காவி(லி)களுக்கு எச்சரிக்கை” எனும் கண்டனக் கூட்டம் பேரவையின் துணைப்பொதுச்செயலாளர் தோழர் இரா. உமா தலைமையில் நடைபெற்றது. இளைஞரணி துணைச் செயலாளர் தோழர். இளமாறன் வரவேற்க, திராவிட நட்புக் கழகத் தலைவர் தோழர். சிங்கராயர் கூட்டத்தைத் தொடக்கி வைத்தார். திமுக செய்தித் தொடர்பாளர் சூரியா கிருஷ்ணமூர்த்தி, எழுத்தாளர் சூர்யா சேவியர் கண்டன உரையாற்றினர். நிகழ்வில் இளைஞரணிச் செயலாளர் தோழர் இரா. சந்தானம் நன்றி கூறினார். நிகழ்ச்சியைத் தலைமை நிலையச் செயலாளர் தோழர். ப. எட்வின் தொகுத்து வழங்கினார்.

நிகழ்வில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை இளைஞரணி, திராவிட நட்புக் கழகம் மற்றும் திராவிட மாணவர் பேரவைத் தோழர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

# நூல் அறிமுகக் கருத்தரங்கம்



விருதுநகர் மாவட்ட திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா நூல் அறிமுகக் கருத்தரங்கம் இராஜபாளையத்தில் 05.10.2024 அன்று மாவட்டப் பொருளாளர் தோழர் பாஸ்கரன் தலைமையில் மாவட்டத் தலைவர் இராவணன், மாவட்டத் துணைச் செயலாளர் பழனிவேலு முன்னிலையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் விருதை ராஜேஸ் வரவேற்றார். அமைப்புச் செயலாளர் ப.புலேந்திரன் தொடக்கவுரை ஆற்றினார். இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கப்பாண்டியன், தி.மு.க பொதுக்குழு உறுப்பினர் செ.கனகராஜ், தி.மு.க நகரச் செயலாளர் மணிகண்ட ராஜா, ம.தி.மு.க நகரச் செயலாளர் மதியழகன், ம.தி.மு.க மாநில கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் பாண்டுரங்கன், தி.க மாவட்டத் தலைவர் சிவக்குமார், எழுத்தாளர் நரேந்திரகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பேரவையின் தலைவர் சுபவீ அவர்களின் "கலைஞரின் நெஞ்சுக்கு நீதி ஓர் அறிமுகம்" நூல் குறித்து துணைப் பொதுச்செயலாளர் வழக்கறிஞர் இராம.வைரமுத்துவும், திராவிட இயக்க ஆய்வாளர் ப.திருமாவேலன் எழுதிய "திரும்பத் திரும்பத் திராவிடம் பேசுவோம்" நூல் குறித்து கொள்கை பரப்புச் செயலாளர் கி.இரவிச்சந்திரனும் சிறப்புரை ஆற்றினர். தோழர் சுல்தான் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் தோழர்கள் வெற்றிச்செல்வன், அமர்நாத், அருள்ஜோதி பாபா, ஸ்டுடியோ சரவணன், பார்த்திபன், ரபீக் ராஜா, ஆசிரியை மாரியம்மாள், ராகிலா தேவி, தமிழ்ச்செல்வி உள்ளிட்டோர் பங்கேற்றனர்

# பேரவைத் தலைவரின் நிகழ்ச்சிகள்:



**13.10.24**

- காலை 9 மணி - திண்டிவனம் - திமுக இளைஞரணி நடத்தும் பேச்சுப் போட்டி

**15.10.24**

- காலை 11 மணி - தலைமைச் செயலகம் - நல்ல தமிழ் உச்சரிப்புக்கான தேர்வுக் குழுக் கூட்டம்
- மாலை 5 மணி - சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவரிடையே உரை

**16.10.24**

- காலை 10.30 மணி - சென்னை, கௌரிவாக்கம் - SIVET கல்லூரி மாணவரிடையே உரை

**19.10.24**

- காலை 10.30 மணி - தென்காசி - திராவிடக் கருத்தியல் குறித்து ஆசிரியர்களிடையே உரை
- மாலை 6.30 மணி - தென்காசி - திமுக பொதுக்கூட்டம்!

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## தொழிலாளர் உரிமை காப்போம்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குத் தொழில்துறையின் வளர்ச்சி மிகவும் முக்கியமானதாகும். முதலீடுகளைப் பெறுவதற்கும், வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்கும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பு முக்கியமானதாக இருக்கிறது. அதே நேரத்தில், தொழிலாளர் இல்லை என்றால், தொழில்கள் இல்லை; நிறுவனங்கள் இல்லை. தொழிலாளர் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் கடமை அவர்கள் பணிபுரியும் நிறுவனத்திற்கும், அதற்கும் மேலாக அரசாங்கத்திற்கும் உள்ளது.

சாம்சங் தொழிலாளர் பிரச்சினையில், தமிழ்நாடு அரசு கவனமாகச் செயல்பட்டு இரு தரப்பிற்கும் இடையே சமரசம் ஏற்படுத்தியதோடு, தொழிலாளர்கள் கோரிக்கை பெரும்பாலானவற்றை ஏற்றுக் கொள்ளும்படிச் செய்திருக்கிறது. காவல்துறையினரின் நள்ளிரவு கைது போன்ற அத்துமீறல்கள் தவிர்த்திருக்கப்பட வேண்டியவை. அதே நேரத்தில் தொழிலாளர்களுக்கான சங்கம் வைப்பதற்கான உரிமை வழங்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

தொழிலாளர்கள் பெரும்பான்மையினராக உள்ள ஒரு சங்கத்தை அமைத்து, பேச்சுவார்த்தை நடத்த நிர்வாகம் முன்வர வேண்டும் என்ற கோரிக்கையுடன் தொழிலாளர் நலத்துறை ஆணையரிடம் முறையாக சங்கத்தைப் பதிவு செய்ய விண்ணப்பிக்கிறார்கள் அந்நிறுவனத்தின் பணியாளர்கள். இதில் காலதாமதம் ஆனதன் விளைவே தொழிலாளர்களைப் போராட்டச் சூழலுக்குத் தள்ளியது. இதனைக் கண்டித்துக் கூட்டியக்கம் நடத்தியதில் திமுகவின் தொழிற்சங்கமான தொ.மு.ச.-வும் இருக்கிறது. எனவே இதனை ஒட்டுமொத்தமாக ஆளும் திமுக அரசிற்கு எதிராகச் சித்தரிப்பது தவறு.

அதே வேளையில், அனைவரும் வர்க்கமாக இணைய வேண்டும் என்று குரல் எழுப்பும் கம்யூனிஸ்டுகள், அடிப்படை உரிமையோ, ஊதியமோ இல்லாமல் தமிழ்நாட்டில் பணிபுரியும் லட்சக்கணக்கான வட மாநிலத் தொழிலாளர்களின் பிரச்சினையில் எடுக்கும் நிலைப்பாடு என்ன என்பது விவாதத்திற்கு உரியது.

இந்தப் பிரச்சினை நீதிமன்றத்தில் இருக்கிறது என்பதைக் காரணம் காட்டாமல், தொழிலாளர்களின் அடிப்படை உரிமையான சங்கம் அமைப்பதற்கு உரிய அனுமதியினை வழங்குமாறு சாம்சங் நிறுவனத்தைத் தமிழ்நாடு அரசு அறிவுறுத்தி விரைவில் இதற்குத் தீர்வு காண வேண்டும்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழ்ப் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# முரசொலி செல்வம்

## அவர்களுக்குப் புகழ் வணக்கம்!



**கடந்த 10.10.2024 அன்று மறைந்த முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு பேரவையின் சார்பில் பேரவைத் தலைவரும், தோழர் திராவிடச்செல்வனும் நேரில் சென்று மரியாதை செலுத்தினர்.**

## அனைத்தும் ஆயுதபூசை செய்யாதவன் கண்டுபிடித்தது!



ஓலைக் குடிசையும், கலப்பையும், ஏரும், மண்வெட்டியும், அரிவாளும், இரட்டை வண்டியும், மண்குடமும் உனக்குத் தெரிந்த கண்டு பிடிப்புகள்.

தீக்குச்சிப் பெட்டிகூட நீ செய்ததில்லை.

கர்ப்பூரம்கூட நீ செய்ததில்லை.

கடவுள் படங்களுக்கு அலங்காரத்துக்குப் போடும் கண்ணாடிகூட சரஸ்வதி பூசை அறியாதவன் கொடுத்துதான் நீ கொண்டாடு கிறாய்.

ஒரு கணமாவது யோசித்தாயா, இவ்வளவு பூசைகள் செய்து வந்த நாம், நமது மக்கள், இதுவரை, என்ன, புதிய, அதிசயப் பொருளைக் கண்டுபிடித்தோம், உலகுக்குத் தந்தோம், என்று யோசித்துப் பாரப்பா! கோபப்படாதே! உண்மை அப்படித்தான் கொஞ்சம் நெஞ்சை உறுத்தும். மிரளாமல் யோசி. உன்னையும் அறியாமல் நீயே சிரிப்பாய்.

அறிஞர் அண்ணா

# கலைஞர் என்றொரு தலைவர்

**நிகில் தேவ், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம்**

நீண்ட காலத்துக்குப் பிறகு பெரியாரை வலதுசாரிகள் கடுமையாக விமர்சிக்கத் தொடங்கியதால் அந்த வருடம் புத்தகக் கண்காட்சியில் பெரியார் எழுதிய "பெண் ஏன் அடிமையானாள்?" என்ற புத்தகம் பெரிய அளவு தமிழ்நாட்டில் விற்பனையானது. அந்தப் புத்தகம் தான் விற்பனையில் அந்த வருடம் முதல் இடத்தை பிடித்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஆரம்பத்தில் அரசியல் பழகும் பொழுது முதலில் நான் படிக்கத் தொடங்கிய தலைவர் தந்தை பெரியார் அவர்கள். அவரைத் தொடர்ந்து சில தலைவர்களை அங்கும் இங்குமாக வாசித்ததும் சிலரிடம் பேசிப் புரிந்து கொண்டதும் உண்டு.

கலைஞரைப் பற்றி அதுவரை கேள்விப்பட்ட எனக்கு கலைஞர் எவ்வளவு நெருக்கமானவர் என்பது அவர் மறைந்த அன்றுதான் தெரிந்தது.

நான் ஒரு வேலைக்கான நேர்காணலில் இருக்கும் பொழுது தான் அந்தச் செய்தி எனக்கு வந்து சேர்ந்தது. நேர்காணலில் இருந்து உடனடியாக அனைவரும் வீடு செல்ல வேண்டும், கலைஞர் மறைந்து விட்டார், அதனால் கலவரங்கள் வெடிக்க வாய்ப்பு உள்ளது என்று எல்லோரையும் வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள்.

அதுவரை எந்த பாதிப்பும் இல்லாத எனக்கு என் வீட்டில் யாரோ ஒருவர் மறைந்தது போல் மனதிற்கு அவ்வளவு பாரமாக இருந்தது. இவரைப் பற்றி யோசித்து வாகனத்தில் செல்லும் போது என்னை அறியாமல் கண்களில் இருந்து இரண்டு துளி கண்ணீர் வடிந்தது. இப்பொழுதும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. எதற்காக என் கண்கள் கலங்கின? இவரைப் பற்றி பெரிதளவில் புரிதலும் இல்லை, நான் இவரை வாசித்ததும் இல்லை. ஆனாலும் இவரின் இழப்பு ஏன் என்னை இவ்வளவு பாதித்தது என்று எனக்குள் ஓடிய கேள்விக்கான பதில் சில வருடங்களுக்கு பிறகு தான் கிடைத்தது.

கலைஞர் 100

ஆச்சரியம் என்னவென்றால் என்னைப் போலவே பலரும் கலைஞரை அவரது மரணத்தின் பின்புதான் புரிந்து கொண்டார்கள். பலரும் இதைச் சொல்லும் பொழுது எனக்கு கலைஞர் சொன்ன வரிதான் மனதில் ஓடிக்கொண்டிருக்கும். "ஒருவர் மரணத்தின் பின் எத்தனை காலம் மக்களின் நினைவில் இருக்கிறாரோ அத்தனை காலம் அவரின் ஆயுள் கணக்கிடப்படும்". அப்படிப் பார்த்தால் என் மரணம் வரை தலைவர் கலைஞரின் ஆயுள் நீடிக்கும் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை.

பெரியாரின் பகுத்தறிவும் அண்ணாவின் ஆளுமையும் ஒன்றாக இணைத்து பெரியாரின் கனவான அண்ணாவின் தமிழ்நாட்டை தெற்கே உதித்த சூரியனாய் இந்தியாவிற்கும், உலகத்திற்கும் வெளிச்சம் போட்டுக் காட்டியவர் தலைவர் கலைஞர்.

அவரைப் பற்றி பல அவதூறுகளைக் கேட்டதுண்டு. அதில் குறிப்பாக அவர் திருட்டு ரயில் ஏறி வந்தவர், கச்சத்தீவைத் தாரை வார்த்தவர், ஊழல்வாதி, குடும்ப அரசியல் செய்பவர் என கலர் கலராக ரீல் விடுவார்கள்.

வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் ஊழலுக்காகத் தண்டிக்கப்பட்டவர்களும், பதவி இழந்தவர்களும், வாரிசு அரசியலைத் தூக்கிப் பிடித்தவர்களும் கொண்டாடப் படுகிறார்கள். ஆனால் இவை எதிலுமே தண்டிக்கப்படாத தலைவர் கலைஞர் இந்தப் பழியை எல்லாம் சுமந்து செல்ல வேண்டி இருக்கிறது, மரணத்திற்கு முன்பு மட்டும் அல்ல மரணத்திற்குப் பிறகும் கூட.

தமிழ்நாட்டில், இந்தியாவில் ஏன் இந்த உலகத்திலேயே இவ்வளவு கடுமையான விமர்சனங்களையும், அவதூறுகளையும், இழிசொற்களையும் எதிர்கொண்ட தலைவர்கள் யாரும் இல்லை என்று நினைக்கிறேன்.

இங்கு எம்.ஜி.ஆரையும், காமராஜரையும் ஏன் ராஜாஜியைக் கூட புனிதப்படுத்தி வைத்திருக்கும் அரசியல் தலைவர்கள் கலைஞரை மட்டும் ஒதுக்கி விட்டார்கள். அதற்கு என்ன காரணம் இருக்க முடியும்?

எம்.ஜி.ஆரும், காமராஜரும், ராஜாஜியும் தமிழ்நாட்டின் முதல்வர்கள்; ஆனால் கலைஞர் மட்டும் தி.மு.க தலைவர்.

தமிழ்நாட்டில் இருந்து கலைஞரைக் கழித்து விட்டால் என்னவாக இருக்கும் என்று இந்த வசைச் சொற்களின் உரிமையாளர்கள் அனைவருக்கும் தெரியும். அது வெறும் அரசியல் தலைவர்களுக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டின் மக்களுக்கும் தெரியும். அதற்கான சாட்சிதான் ஒருமுறை கூட சட்டமன்றத் தேர்தலில் தோற்கடிக்கப்படாத தலைவராக கலைஞர் நிமிர்ந்து நிற்கிறார்.

புதிதாக அரசியல் கட்சி தொடங்குபவர்கள் சொல்லும் ஒரே வசனம், நான் எம்ஜிஆரைப் போல ஆட்சி புரிவேன், காமராஜரைப் போல ஆட்சி புரிவேன் என்பதுதான். இப்பொழுதுதான் புரிகிறது அவர்களைப் போல ஆட்சியை நடத்துவது எளிது. ஆனால் கலைஞரைப் போல ஆட்சியை நடத்த வேண்டும் என்று நினைப்பதே கடினம் என்று.

ஆரம்ப காலத்தில் நான் எங்கோ வாசித்த கலைஞரின் ஒரு வரி வசனம் "நான் தாக்குதல்களைத் தாங்கிக் கொள்ளும் பழக்கம் உள்ளவன் மாத்திரமல்ல, தாக்குதல்களை விரும்புபவனும் கூட. தாக்கப்பட்டால்தான் நானே கூட மெருகுபெற முடியும்"

கலைஞரைப் பற்றி அவருடன் பயணித்தவர்களும் அவரை வாசித்தவர்களும் ஏன் இவ்வளவு சிலாகித்துப் பேசுகிறார்கள் என்று யோசித்து இருக்கிறேன். இப்பொழுதுதான் புரிகிறது கலைஞருடன் பயணிப்பதே கடினம் என்று.

கலைஞரைப் பற்றிப் பேசினால் குற்றம், கலைஞரைத் தூக்கிப் பிடித்தால் குற்றம், கலைஞர் செய்த நன்மைகளைப் பேசினால் குற்றம், கலைஞர் என்று சொன்னாலே இங்கு குற்றம்தான்.. அவ்வளவு ஏன் கலைஞரின் புகைப்படம் இருக்கும் ஒரு *T-shirt* அணிந்தாலே நம்மை அவ்வளவு விமர்சனம் செய்வார்கள்.....

ஒருமுறை சில தோழர்களுடன் டீக்கடைக்குச் செல்லும் பொழுது தந்தை பெரியாரும், பாரதியாரும், திருவள்ளுவரும், தலைவர் கலைஞரும் இருந்தபடி ஒரு *T shirt* அணிந்திருந்தேன். கூட இருந்த தோழர்கள் முதலில் குறிப்பிட்ட மூன்று பேரில் படங்கள் இருப்பதை ஏற்றுக் கொண்டனர். ஆனால் தலைவர் கலைஞரின் படத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தனர்.

உங்களுக்கு அது உறுத்துமே! ஆனால், அந்த மூன்று புகைப்படங்களையும் நீக்கிவிட்டு வெறும் தலைவர் கலைஞரின் படம் இருக்கும் *T.shirt* அணிந்து கொள்ள எனக்குச் சிறிதளவு கூடத் தயக்கம் இல்லை, பெருமைதான்....!

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian